# யெகோவா என்பவர் ஆர்?

ஒவ்வொரு நாமத்துக்கும் ஒவ்வொரு கருத்தும் ஒவ்வொரு கதையுமுண்டு. நாம் கணபதி என்று சொல்லும்போது, அப்பெயர் "கணங்களுக்கதிபதி" எனப் பொருள்படுகின்றது. இக்கதை கணேச புராணத்திற் கூறப்பட்டிருக்கின்றது. "கடவுள்" "பராபரன்" "சிவன்" "கலேசன்" முதலிய அநேகநாமங்கள் அவைகளின் பொருட்படி தேவனுக்குச் சூட்டப்படலாம். ஆனால் அந்த நாமங்களிற் சிலவற்றுடன் கூடிய கதைகளோ அவருக்கு ஏற்றவைகளல்ல. "யெகோவா" என்னும் நாமம் எவ்வாற்றாலும் தேவனுக்கு ஏற்றதாக இருக்கிற கருத்தும் கதையுமாகிய இரண்டும் பொருந்தினதாயும், அதுதான் அவருடைய நாமமென்று ரூபிக்கப்பட்டதாயுமிருக்கிறது. இந்நாமத்திற்கு "இருக்கிறவராக இருக்கிறேன்" என்பதே பொருள். அதாவது, சுயாதீனராயும், சதாநித்தியராயும் இருக்கிறவர் என்பதேயாம்.

யெகோவாவின் கிரியாசரிதம் விவிலிய நூலிற் பழைய ஏற்பாட்டிலே விபரிக்கப்பட்டிருக்கின்றது. இச் சரிதம் அவரை ஏகதேவனெனத் திருஷ்டாந்தப்படுத்துகின்றது. அவர் ஆவியாயிருக்கிறார். ஆவியென்பது சட பதார்த்தக்கலை அற்றதும், சுய சைதன்னியமும் சுய சித்தமுமுள்ளதுமாகிய சித்துப் பொருளேயாம். மனுஷர் தேவசாயலாய்ச் சிருஷ்டிக்கப்பட்டார்களென்று விவிலிய நூல் கூறுவதின் பொருள் அவர்கள் அவரைப்போலச் சுய சைதன்னியமும், சுய சித்தமுமுடையவர்களாய்ச் சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்பதே. ஆனால் தேவன் எல்லையற்ற சித்துப் பொருளாயும், சர்வ வியாபகராயும், சட வடிவத்தால் எல்லைப்படுத்தப்படாதவராயும் இருக்கிறார்.

இப்படியிருக்க, யெகோவா ஏதேன் தோட்டத்திலே ஆதாமுடன் கூடி உலாவினார் என்றும், மோசே அவரைத் தரிசித்தான் என்றும் விவிலிய நூல் எப்படிச் சொல்லலாம் என்கிறார் சிலர். மின்சாரம் சடவடிவமற்றதாய்ப் பூமியின் எப்பகுதியிலும் செறிந்திருக்கின்றது. ஆகிலும் அது சிற்சிலவேளைகளிற் சடவடிவமுடையதாய்க் கட்புலனுக்கு விடயமாகிறதுமுண்டு. அவ்வண்ணமே யெகோவாவும் அரூபராயும், எங்கும் வியாபகராயும் இருந்தும்

தம்மை ஓர் வடிவத்தினால் வெளிப்படுத்தக் கூடியவராயிருக்கிறார். அவர் வடிவத்தை எடுக்கிறபோது, மனுஷசாயலாகவே காணப்படுகிறார். அதுதான் ஓர் ஆவிக்கு ஏற்றதாக இருக்கின்றது. ஆகையினால் அவர் தம்மை ஓர் வடிவத்தினால் வெளிப்படுத்தக்கூடியவரேயன்றிச் சட வடிவத்தால் எல்லைப்படுத்தப்படாத அரூபசொரூபியாயிருக்கிறார்.

அவர் வானத்திலே வாசம்பண்ணுகிறாரென்று விவிலிய நூல் கூறுகின்றது. அதினால் அவர், வானத்தையும் பூமியையும் உண்டாக்குமுன் இருந்திலர் என்பது இதன் பொருளன்று. அந்த வசனத்திலே குறிக்கப்பட்ட வானம் என்னும் மொழி நட்சத்திர மண்டலம் என்று அருத்தப்படுகின்றது. தேவனுடைய வாசஸ்தலமோ மூன்றாம் வானமாயிருக்கின்றது. அவர் நித்திய மகிமைக்குள் வாசம்பண்ணுகிறார்; ஆயினும் எல்லைப்படுத்தப்படாதவராயிருக்கிற தேவனுடன், இடம், காலம் என்னும் எல்லைகளைச் சேர்த்து நாம் பேசவேண்டியதென்ன!

தேவன் சிருட்டிப்புத்தொழிலைத் தொடங்குமுன் என்ன செய்துகொண்டிருந்தனர் என்கிறார் சிலர். சிருட்டிப்புத் தேவ கிரியையாயிருப்பதினால் அது தேவனுடையதாமல் எல்லைப்பட்டதாயிருக்கிறது. ஆகையால், இடம், காலம் என்பனவைகளில் அதற்கு எல்லை இருக்கவேண்டும். இவ்வெல்லைக்கப்பாலிருப்பது இன்னதென்று ஒருவர் எமக்குச் சொல்வாராகில், கால எல்லைக்கப்பால், அதாவது சிருட்டிப்புத் தொழிலுக்கு முன், தேவன் என்ன செய்தார் என்று நாமும் அவருக்குச் சொல்லுவோம். இப்படி எல்லை இருக்கவேண்டும் என்று நாம் நிச்சயமாய் அறிந்திருந்தும் அவ்வெல்லையை ரூபப்படுத்தவது மனதினால் கூடாது. தேவன் பின்னொன்றைத் தமக்கு வேண்டியிராத பூரணமுள்ளவராயிருக்கிறார். அவர் தமக்குட் செய்கையையுடையவராயிருக்கிறார். பின்னை ஏன் சிருட்டித்தார்? அது நல்லதாய்க் காணப்பட்டபடியால் அப்படிச்செய்தார்.

சிலர் யெகோவா சகலத்தையும் தமது சொந்தமகிமைக்காகச் சிருட்டித்ததினால் அவர் சுயநேசமுடையவரென்று சாதிக்க, வேறுசிலர் சிருட்டிப்புக்குமுன் அவர் மகிமையற்றவராயிருந்தனரோவென்று தர்க்கமாய்வினவுகின்றனர். அவரது பாக்கியத்திலே மற்றைய பிராணிகளைப் பங்கடையப்பண்ணுவதே அவருடைய மகிமைப்பிரசன்னமாம்,

ஆகையினால் இது சுபசேஷமன்று. எந்த இந்த தேவனின் சரித்திரத்திலாவது இவ்வித அன்பைக் கண்ணுற்றிலம். சிருஷ்டிப்பு அவரது அன்பை வெளிப்படுத்திற்றேயன்றி, அவரது நிலைமையில் வித்தியாசத்தை உண்டாக்கவாவது அவருக்கு மகிமையை அளிக்கவாவது இல்லை.

யெகோவா மனுஷரைச் சிருஷ்டித்ததினிமித்தம் மனஸ்தாபப்பட்டபடியினால் அவர் சர்வஞானமுடையவரல்லரென்று சிலர் ஆட்சேபிக்கின்றனர். ஆனால், இதில் அவர் தாம் ஓர் தவறு செய்தாரென்று நினைத்தாராய், அல்லது தாம் மனுஷனைச் சிருஷ்டியாமலிருந்திருக்க விரும்பினதாய்க் காணப்படவில்லை. பின்னை, மனுஷருடைய பாவத்தினிமித்தம் அவர்களைச் சிருஷ்டித்ததின் பெறுபேறாய் அவர் மனஸ்தாபம் அடைந்தாரென்பதே அதன் பொருள். அவர் மனுஷரைச் சிருஷ்டிக்குமுன்னமே, அவர்கள் என்னசெய்வார்களென்பதை அறிந்திருந்தார். அதினால் தாம் மனஸ்தாபமடைவாரென்பதையும் அறிந்திருந்தார். ஆனால் மொத்தமாய்ப் பார்த்தால், மனுஷசாதியாரின் பாக்கியம் அவர்களுடைய இந் நிர்ப்பாக்கியத்திலும் பார்க்க எத்திறத்தில் அதிகமாயிருக்குமென்றும், வேறெவ் வழியிலும் பார்க்க இவ்வழியால் அது அதிகமாயிருக்குமென்றும் அவர் அறிந்தும் இருந்தார். தேவன் விருப்பு வெறுப்பற்றவராயிருக்கிறாரென்று சைவர் சாதிக்கின்றனர். ஆனால் அவர்களது சாதனை சத்தியமல்ல. தேவன், தமது பிள்ளைகள் பாபத்தைச் செய்யாமல் விட்டுவிடும்போது ஆனந்த பரவசமடைந்து, அவர்கள் பாபஞ்செய்து பாடுகளை அடையும்போது வியாகுலமடைகிறார். அவரடையும் வியாகுலம் அவரது நிலைபெறுந பாக்கியத்தைக் குறைக்கமாட்டாது. துக்கப்படும் தன் பிள்ளையுடன் ஒரு மாதா அடையும் துக்கம் அவளுடைய சந்தோஷத்தை நீக்குகிறதில்லையே.

யெகோவா சாத்தானை உண்டாக்கினபோது, அவன் ஓர் பிசாசாகித் தன்னை வியந்து மட்டும் தம்மை எதிர்க்கப் பிரயாசப்படுவான் என்றும் அவர் அறிந்திருந்தார். ஆனால் ஈற்றிலே தாமே அவனைச் செயிப்பார் என்பதையும் அவர் அறிந்திருந்தார். நாம் யாதொன்றையாவது தனித்தனி சீர்தூக்கிப் பாராமல், மொத்தமாய்ச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். மொத்தத்திற் காரியத்தின் பெறுபேறு

நயமாகவே இருக்கும் என்று நிச்சயித்திருக்கிறோம்.

யெகோவா மனுக்குலத்தைச் சலப்பிரளயத்தால் அழித்து, கானானில் வாசம்பண்ணின சகல சாதிகளையும் நிருமூலமாக்கும்படி இஸ்ரவேலருக்குக் கட்டளையிட்டிருந்தபடியினால், அவரைத் துஷ்டதேவன் என்று சிலர் கூறுகிறார்கள். சகலசனங்களும் மிக்க ஆகாமியக்காரராயிருந்தபடியினால், அவர் அவர்களைச் சலப்பிரளயத்தால் அழித்தார். அவர்கள் கேட்டின்மேற் கேடு நிறைந்தவர்களாயிருந்தார்கள். அப்படியிருந்தும் 120 வருஷங்களாக அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணவும் அவர்களை எச்சரிக்கவும் நோவா என்பவனை நியமித்தார். இவ்வண்ணம் பின்னும் அநேக வருஷம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டாலும், அவர்கள் வரவர அதிக கேடுள்ளவர்களாய் மாத்திரம் வருவார்களே யன்றி மனந் திரும்பவே மாட்டார்கள். மரணத்தின் பின் அவர்களுடைய பாடுகளோ மெத்த அதிகமா யிருக்கும். இப்படி அவர்களை அழித்தது தேவன் அவர்களுக்குக் காண்பித்த பெரிய இரக்கமேயாம். அன்றியும் பிற் சந்ததியாரைக் காப்பதினிமித்தமும் அவர் இப்படி அவர்களைச் சங்கரிப்பது அவசியமா யிருந்தது. சலப்பிரளய சங்காரத்தின் பின்னும் உலகத்தில் அதிகபாவ மிருந்தது. ஆனால், அதற்கு முன்னிருந்தது போல உலகமெங்கும் அவ்வளவு கேடாயிருக்கவில்லை.

கானானியரோ மற்றெச்சாதிகளிலும்பார்க்க அதிக ஆகாமியக்காரராயிருந்தார்கள். அவர்கள் சகலசாதிகளுக்கும் மையஸ்தானத்திலிருந்து சகலரையும்பழுதுபடுத்தினார்கள். மைய ஸ்தானத்திலே ஓர் பரிசுத்த சாதியைக் குடியிருத்துவது மிக அவசியமாக இருந்தது. இஸ்ரவேலர் பூரண பரிசுத்தராய் இராததினாற் தேவன் பலவழியாலும் நற் சீர் பெறும்படி அவர்களை வளர்த்தார். முதலாவது கொடிய அடிமைத்தனத்தினாலும், இரண்டாவது அவர்கள் அவருடைய உபதேசத்துடனே தனிமையாய் வனவாசஞ்செய்ததினாலும் நற்சீர் அடைந்தார்கள். அவர்கள் நற்சீரடைய வளர்க்கப்பட்டதில் ஓர் பகுதி கானானியரைச் சங்காரம் பண்ணுவதிலே யிருந்தது. அவ்விதசனங்கள் தற்காலத்தில் வாசம்பண்ணுவார்களானால் அவர்கள் சங்கரிக்கப்படத்தான் வேண்டும் என்று நாம் அனைவரும் ஏகோபித்துச் சொல்லுவோம். அச்சாதியார்

யாவரும் கொலைபாதகராயு மிருந்தார்கள். தங்கள் பிள்ளைகளைப் பலியாக உயிரோடே தகனித்தார்கள். அவர்கள் தங்கள் சகலவித ஆராதனைகளிலும் விபசாரஞ்செய்தார்கள். புருஷர் தங்களுக்குக் கொடிய வியாதி உண்டாகத்தக்கதாக ஒருவரோடொருவர் அருவருப்பானவைகளை நடப்பித்தார்கள். இக்கொடிய வியாதிகள் அவர்களில் அநேகரை நாசமாக்கினவன்றி மற்றச்சனங்களையும் அழிக்கத்தக்க சாடையுள்ளவைகளாயு மிருந்தன. அவர்களை அழிப்பது மற்றய சாதியாரின் இரட்சிப்புக்கு அவசியமாயிருந்தது. அவர்களும் அவ்வழிவுக்கு முற்றும் பாத்திரராயிருந்தார்கள். இஸ்ரவேலர் அவர்களை அழிப்பதினால் அவர்களுக்குள்ளிருந்த சகல தீம்பானவைகளையும் குற்றங்களையும் வெறுக்க ஏவப்பட்டார்கள்.

யெகோவா ஆபிரகாமுடனே அவனது ஏகபுத்திரனைப் பலிசெலுத்தும்படி கட்டளையிட்டபடியினால் அவரைக் கொடியவரென்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர் அவனைக் கொல்லும்படி ஆபிரகாமுடனே சொல்லவில்லை. அவனை "ஓர் பலியாகவே பலியிடு" என்பதே அதின் சரியான மொழிபெயர்ப்பு. பூரணமாய் ஒப்புக்கொடு என்பதே அதின்கருத்து. ஆபிரகாம் அந்நேரம் அதை விளங்கிக்கொள்ளவில்லை. அவன் அப்படி அதை விளங்கிக்கொள்ளாதது அவனுக்கு ஓர் படிப்பினையாகவுமிருந்தது.

யெகோவா தாம் "எரிச்சலுள்ள தேவன்" என்று சொல்லுகிறார். ஒரு ஸ்திரி தன் புருஷனை விட்டுப் பின்னொருவனுடன் கூடிப் பதிவிரதம் கடக்கும்போது அவளது நாயகன் எரிச்சல்கொள்ளுகிறான். அதினால் மற்றவர்கள் அவனை மெய்ச்சிக்கொள்ளுகிறார்கள். தேவன் தம்மைத் தமது சனங்களின் நாயகர் என்று சொல்லுகிறார். (ஏசா. 54: 5.) அவர்கள் அவரை விட்டு அன்னிய தேவர்களை வணங்கும்போது அந்தச் சனங்களுடன் அவர் கோபங்கொள்வது சரியாயிருக்கிறது. இதுவே "எரிச்சல்" என்பதின் பொருள்.

இன்னும் யெகோவா, பாபஞ்செய்த பெற்றோரின் பிள்ளைகளைத் தாம் மூன்றாம் நாலாம் தலைமுறைமட்டும் விசாரிப்பேனென்று சொன்னதினால், அவர் அநியாய முள்ளவரென்றும் சொல்லுகிறார்கள். அவர் பெற்றோரின் பாபங்களுக்காகப் பிள்ளைகளைத் தண்டிக்கிறார் என்பது இத

ன் பொருளல்ல. "குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை" என்று கூறுகிறார். (எசே. 18. 20.) பெற்றோர் பாபஞ்செய்கிறபோது அவர்களிடத்திற் பிறக்கும் பிள்ளைகளுக்கு அநேக கஷ்டங்களுண்டாகின்றன. பெற்றோரின் பாபம் சிலவேளை ரோகையும், சிலவேளை தரித்திரத்தையும், சிலவேளை வெறிப்பதார்த்தங்களிற் பிரியம்வைக்கும் சாய்மானத்தையும், சிலவேளை களவு முதலிய மற்றைப் பாபங்களுக்கேதுவான வழக்கங்களையும் அவர்களுக்கு வருவிக்கின்றது. பிள்ளைகள் அவைகளை மேற்கொள்ளக்கூடியவர்களானபடியால் இவைகள் அவர்களுக்கு அநியாயமல்ல. பெற்றோர் தங்கள் பிள்ளைகளினிமித்தமாகவும் தங்களைப் பாபத்துக்கு விலக்கிக் காத்துக்கொள்ள ஏதுவாயிருக்கும். இவ்வாறாகவே, சகலரும் ஆதாமினாலே பாவிகளானார்கள். ஆதாம் பாபஞ்செய்தபடியினால் அவனது பின்சந்ததியார் சகலரும் பாபஞ்செய்யும் சாய்மானமுடையவராயினர். ஆனால் தேவன் பாபத்துக்குத் தப்ப விரும்புகிறவனுக்கு உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கிறார். அதினால் அவரில் அநியாயம் சிறிதுமில்லையென்பது துலாம்பரம். அவர் தமக்கு நியாயம் என்று காண்கிற அளவாய் ஒவ்வொருவருக்கும் பரிசுத்தாவியின் சகாயத்தை அளிக்கிறார். அவருடைய உதவியைத் தேடாதவர்களுக்கும் அப்படியளிக்கும் சித்தமுடையவராயிருக்கிறார். பாப மன்னிப்பைக் கேட்கிற சகலரும் அதைப் பெற்றுக்கொள்ளும்படி அவர் பாபப்பிராயச்சித்தத்தைச் செய்திருக்கிறார். இவ்வுலகத்தி னிறைந்திருக்கிற சகல பாபங்களும், வியாதிகளும், பாபத்தின் பெறுபேறாயிருக்கின்றன. ஆகையினால் அவைகளுக்காக நாம் தேவனிற் குற்றஞ்சாற்றல் கூடாது. என்றாலும் அவைகள் அவருடைய உத்தரவின்றி உலகத்தினுழைந்தில. அவைகள் நமக்குப் பாபத்தை நினைப்பூட்டி எச்சரித்து, நம்மை நாசமாக்கும் இவ்வுலகத்தை விட்டு நமது சிந்தைகளைத் திருப்பி நமது நித்தியவீடாகிய மோட்சத்தை நினைக்கப்பண்ணுவதினால் அவைகள் நன்மைக்கேதுவாக இருக்கின்றன.

இப்படி நாம் எவ்விதமாய்ப் பார்த்தாலும் யெகோவாவிற் கடவுளுக்கேற்ற இலட்சணங்கள் பூரணமாய்க் காணப்படுகிறபடியினால் அவரையே வணங்குவோமாக.

Strong and Asbury Printers, Manippay, 1887.
First Edition, 5000.